# உமா வாசகம்

## 2



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 .. 1955
593
4-55

புத்தக நிலையம். கண்டி.

TB
0-,6(3)
N54-2
146547

# உமா வாசகம்

## இரண்டாம் புத்தகம்

இலங்கைப் பாடசாலைகளின் உபயோகத்திற்கென
இலங்கைக் கல்விப் பகுதியாரின் புதிய பாடத்
திட்டத்தைத் தழுவி எழுதப்பெற்றது.

OFFICE OF THE REGISTRAR OF
MADRAS

திருத்திய பதிப்பு

Approved for Class Reader
By the Director of Education, July 1955



பிரசுரம் :
கலைவாணி புத்தக நிலையம்
130, திரிகோணமலை வீதி, கண்டி

பதிப்புரிமை] 1955 [விலை : சதம் 60

திருத்திய முதற் பதிப்பு—செப்டம்பர் 1954
இர்ண்டாம் பதிப்பு—செப்டம்பர் 1955

ஆவணக்காப்பக
146547
-600 008

TB
0-,6(2)
N54-2

Kabeer Printing Works, Madras (3005)

# முன்னுரை

**உமா வாசகம்** என்னும் பெயருடன் வெளிவரும் இந்நூல்கள் இலங்கைக் கல்விப் பகுதியாரின் புதிய பாடத் திட்டத்தைத் தழுவி நம்நாட்டு இளைஞர்கள் கற்றுப் பயனடையும் வண்ணம் எழுதப் பெற்றவையாகும்.

இரண்டாம் வகுப்புக்கென அமைந்த இந்நூற்கண் செல்வச் சிருர்களின் கண்ணைக் கவரும் படங்களும், உள்ளத்தை அள்ளும் பாட்டுக்களும் மொழியறிவை வளர்க்கத்தகும் உயரிய பயிற்சிகளும் நிரம்ப இடம் பெற்றுள்ளன.

மேனுட்டு நூல்களையொப்ப இந்நூல் சகல சிறப்பு-களும் நிறைந்து விளங்க வேண்டுமென்பது எமது பேராவல். இதன் ஏடுகளைப் புரட்டிப் பார்க்கும் எவர்க்கும் இஃது எளிதில் புலனுகும்.

ஆசிரியத் தொழிலின் நீண்ட நாளனுபவத்தில் கண்ட நன்முறைகளை அனுசரித்து இளைஞர் தம் உள-நிலைக்கேற்ப எழுதிய இந்நூலினை நம் நாட்டுக் குழந்தை-கள் கற்றுப் பயனடைய ஆவன செய்யுமாறு ஆசிரிய அறிஞர்களை அன்பாய் வேண்டுகிருேம்.

கண்டி,<br>1—8—54 } பதிப்பாளர்

# உள்ளுறை


| பாடம் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பூ | ... | 1 |
| 2. | அடைபட்ட சிங்கம் (பாட்டு) | ... | 4 |
| 3. | நரியின் பேராசை | ... | 6 |
| 4. | நான் யார் | ... | 9 |
| 5. | பாப்பா அறிந்து கொள் (பாட்டு) | ... | 12 |
| 6. | நன்றி உள்ள நாய் | ... | 14 |
| 7. | சுகவழி | ... | 17 |
| 8. | கிழமை நாள்கள் | ... | 19 |
| 9. | கோழி | ... | 22 |
| 10. | உலாவப் போவோம் (சம்பாஷணை) | ... | 25 |
| 11. | கிழக்கு வெளுத்தது (பாட்டு) | ... | 29 |
| 12. | கமத்தொழில் | ... | 31 |
| 13. | காணமற்போன கடிதங்கள் | ... | 34 |
| 14. | மோட்டார் வண்டி | ... | 37 |
| 15. | வீட்டு மிருகங்கள் | ... | 40 |
| 16. | என் கதை | ... | 44 |
| 17. | வாழை | ... | 47 |
| 18. | படத்தின் பெயரைச் சேர்த்து வாசித்தல் | ... | 50 |
| 19. | குரங்கு | ... | 51 |
| 20. | எங்கள் பாட்டி (பாட்டு) | ... | 54 |
| 21. | மூங்கில் இலை மேலே | ... | 56 |
| 22. | சிங்கம் பேசுகிறது | ... | 59 |
| 23. | நரியும் குகையும் | ... | 62 |
| 24. | பழமொழிகள் | ... | 65 |
| 25. | கொன்றைவேந்தன் | ... | 66 |
| 26. | வெற்றிவேற்கை | ... | 67 |

# உமா வாசகம்

## இரண்டாம் வகுப்பு



### 1. பூ

1. பூக்கள் மிகவும் அழகானவை. அவை நல்ல மணத்தை நமக்குத் தரு-கின்றன. பூக்கள் பலபல நிறங்களை உடையன. மணம் இல்லாத சில பூக்களும் உண்டு.

2. மலராத பூவிற்கு அரும்பு அல்லது மொட்டு என்று பெயர். பூக்களுக்குப் பல

இதழ்கள் உண்டு. சில பூக்கள் பகலிலும் சில பூக்கள் இரவிலும் மலர்கின்றன. தாமரை, ரோசா முதலிய பூக்கள் பகலில் மலர்கின்றன. குமுதம், ஆம்பல் முதலிய பூக்கள் இரவில் மலர்கின்றன.

3. பூக்களில் சிறந்தது தாமரைப்பூ. தாமரை குளங்களில் வளரும். பல நூற்றுக்-கணக்கான தாமரைப்பூக்கள் குளத்தில் பூத்திருப்பதைப் பார்க்க அழகாக இருக்கும்.

4. பூக்களில் தேனுண்டு. வண்டுகள் தேனுண்டு பாடும். பூக்களினால் மாலை கட்டலாம். பூவையும் மாலையையும், சுவாமிக்-குச் சாத்தி வழிபடுகின்றோம். பெண்கள் பூக்களைப் பிரியமாய் அணிவார்கள்.

| | | |
|---|---|---|
| மணம் | மொட்டு | வழிபடுதல் |
| தருகின்றன | இதழ் | அலங்கரிக்க |
| நிறங்கள் | பூத்திருப்பது | பிரியமாய் |
| மலராத | உபயோகித்தல் | அணிவார்கள் |
| அரும்பு | சாந்தி | மாலை |

**விளக்கம் :**

1. மலராத பூவிற்கு என்ன பெயர்?
2. இரவில் மலரும் பூக்கள் எவை?
3. பூக்களில் சிறந்த பூ எது?
4. பூக்களின் உபயோகம் என்ன?
5. மணமுள்ள சில பூக்கள் கூறுக.

**பேச்சு :**

**கோடிட்ட இடம் நிரப்பல் :**

1. பூக்கள் மிகவும்............
2. பூக்கள் பலபல............உடையன.
3. மலராத பூவிற்கு............என்று பெயர்.
4. பூக்களில்............தாமரைப்............

**பன்மை ஆக்கல் :**

| | | |
|---|---|---|
| 1. பூ | 3. செடி | 5. குளம் |
| 2. மரம் | 4. கொடி | 6. வீடு |

**வசனம் ஆக்கல் :**

| | | |
|---|---|---|
| 1. அரும்பு | 3. தாமரை | 5. பிரியமாய் |
| 2. மாலை | 4. மலர் | 6. மணம் |

**சேர்த்து வாசித்தல் :**

| | |
|---|---|
| 1. தாமரை பூ | 3. பூத்து இருப்பது |
| 2. தேன் உண்டு | 4. நிறங்கள் உடைய |

**எழுத்து :**

**1. வாக்கியம் எழுதல் :**

| | |
|---|---|
| 1. நிறங்கள் | 3. பூக்கள் |
| 2. கொடி | 4. மாலை |

**2.** உமக்குத் தெரிந்த பத்துப் பூக்களின் பெயர் எழுதுக.



## 2. அடைபட்ட சிங்கம் (பாட்டு)

சிங்கம் எங்கே பார்க்கிருய்?
சீறிப் பாய எண்ணமோ?
கொண்டு வந்து உன்னைத்தான்
கூட்டில் போட்டு விட்டோமே
வெள்ளி போலத் தலைமயிர்
விரித்து நிற்கும் சிங்கமே
கொள்ளி போன்ற கண்களால்
குறுகு றென்றே பார்ப்பதேன்
கத்தி போன்ற நகங்களால்
கம்பி யைத்தான் கீறலாம்
உயிரைக் கொன்று அதனது

உடலைக் கிழிக்க முடியுமோ?
மிருக இராச சிங்கமே
மிரட்டி ஏனோ பார்க்கிறாய்?
கூட்டை விட்டு வரவேதான்
பூட்டுப் போட்டி ருக்குதே.

—அழ. வள்ளியப்பா.

| | | | |
|---|---|---|---|
| பார்க்கிறாய் | விரித்து | நகங்கள் | மிருகராசன் |
| சீறிப்பாய | கொள்ளி | கீறல் | மிரட்டி |
| உன்னைத்தான் | குறுகுறு | கிழிக்க | பூட்டு |

**விளக்கம் :**

1. நீங்கள் சிங்கத்தைப் பார்த்திருக்கிறீர்களா?
2. சிங்கம் எங்கே வசிக்கும்?
3. மிருகங்களுக்கு இராசா எது?
4. சிங்கம் எப்படிப்பட்ட குணம் உடையது?
5. சிங்கத்தின் உணவு யாது?

**பேச்சு :**

**கோடிட்ட இடம் நிரப்பல் :**

1. சிங்கத்தின் நகங்கள்.........போன்றவை.
2. .........கொள்ளி போன்றவை.
3. சிங்கம் சீறிப்.........

**எழுத்து :**

**சிங்கத்தைப் பற்றி நான்கு வசனங்கள் எழுதுக.**



## 3. நரியின் பேராசை

1. ஒரு காட்டில் ஒரு நரி இருந்தது. அது மிகவும் பேராசை உடையது. மற்றப் பிராணிகளிடம் ஏதும் சிறப்புகள் இருந்தால் அவை தனக்கும் இருக்கவேண்டும் என்று அது ஆசைப்படும். அது தன்னைப்பற்றி எப்பொழுதும் மற்ற மிருகங்களுடன் பெருமையாகப் பேசிக்கொள்ளும்.

2. ஒரு நாள் அது வரிகள் உள்ள ஒரு புலியைக் கண்டது. தானும் அந்த வரிப்-புலியைப் போல இருக்க விரும்பியது.

3. மறு நாள் அது ஒரு சித்திரக்கார-னிடம் போனது. அது அவனைப் பார்த்து 'ஐயா புலிக்கு இருப்பது போல எனக்கும் வரிகள் வைத்து விடுங்கள்' என்று கேட்டது.

அதற்குச் சித்திரக்காரன் 'நரியாரே நான் வைக்கும் வரிகள் அழிந்துவிடும். அடுத்த தெருவில் இருக்கும் கொல்லனிடம் சென்று, உமது விருப்பத்தை அறிவித்துக்கொள்ளும்' என்று கூறினான்.

4. நரி அவ்விதமே கொல்லனிடம் சென்றது. தனக்கு வரிகள் வைத்துவிடும்படி அவனைக் கேட்டது. கொல்லன் இரும்பை நன்றாகச் சூடாக்கினான். நரியின் மேல் சூடிட்டான்.

5. நரி அந்தச் சூட்டின் வருத்தத்தைப் பொறுக்க முடியாது கூச்சல் இட்டது. சில நாட்களாக வருத்தத்தினால் பெரும் வேதனைப் பட்டது.

**வீண் ஆசை ஆபத்தைத் தரும்**

| | | |
|---|---|---|
| காடு | வரிப்புலி | வருத்தம் |
| பேராசை | ஆசை | கூச்சல் |
| பெருமை | சித்திரக்காரன் | வேதனை |
| பிராணி | அழிதல் | விருப்பம் |
| மிருகங்கள் | கொல்லன் | இறந்து |
| வரிகள் | தெரு | வீண் |
| ஆபத்து | சூடு | |

**விளக்கம் :**

1. நரி எங்கே வாழ்ந்தது ?
2. அது எப்படிப்பட்ட சுபாவத்தை உடையது ?

3. நரி கண்ட புலி எப்படியான தோற்றத்தை உடையது ?

4. நரி சித்திரக்காரனிடம் என்ன கேட்டது ?

5. சித்திரக்காரன் நரிக்கு என்ன பதில் சொன்னுன்?

6. நரி ஏன் வேதனைப்பட்டது ?

7. நரியின் கதை நமக்கு என்ன பாடத்தைக் கற்பிக்கிறது ?

பேச்சு :

கோடிட்ட இடம் நிரப்பல் :

1. ஒரு.........ஒரு.........இருந்தது.
2. எனக்கும்.........வைத்து.........
3. கொல்லன்.........நன்ருகச்.........
4. வருத்தத்தைப்.........முடியாது.........

வசனம் ஆக்குக :

1. பெருமை 3. ஆசை 5. சூடு
2. சித்திரக்காரன் 4. விரும்பி 6. வேதனை

பன்மை ஆக்கல் :

1. நரி 2. புலி 3. வரி 4. நான்

சேர்த்து வாசித்தல் :

| | |
|---|---|
| 1. பிராணிகள் | இடம் |
| 2. மிருகங்கள் | உடன் |
| 3. சூடு | ஆக்கினுன் |
| 4. கூச்சல் | இட்டது |

எழுத்து : இப்பாடத்தில் மூன்ரும் பந்தியைப் பிரதி செய்க.

## 4. நான் யார்?

1. நான் வட்டமாக இருப்பேன். என்னை எல்லோரும் கவனமாக மடியில் வைத்திருப்பார்கள். சில வேளைகளில் நான் தனிமையாகவும், சில வேளைகளில் பல பேருடனும் சேர்ந்திருப்பேன்.

2. எல்லோரும் என்னை எடுத்துக் கொண்டுதான் தூரப் பயணம் போவார்கள். நான் இல்லாவிட்டால் அவர்கள் பஸ் வண்டியிலோ, புகை வண்டியிலோ பிரயாணம் செய்ய முடியாது. செல்வர்களாயினும் வறியவர்களாயினும் என்மேல் பிரியமாய் இருப்பார்கள்.

3. நான் ஒருவகையான உலோகத்திஞல் செய்யப்பட்டேன். நிலத்தில் விழுந்தால் உடனே சத்தம் உண்டாக்குவேன். எவரும் என்னை இலேசில் நிலத்தில் விழ விடமாட்டார்கள். மிகவும் ஒதுக்கமான இடத்தில் நல்ல பூட்டுள்ள பெட்டியில் என்னை வைத்துக் கொள்வார்கள்.

4. என்னை அடைவதற்காக மக்கள் நாள் முழுவதும் பிரயாசையுடன் உழைக்கிருர்கள். நான் இல்லாவிட்டால் மக்கள் இடத்தில் மகிழ்ச்சி இருக்க மாட்டாது. நான் யார் தெரியுமா சொல்லுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| வட்டம் | தனிமை | பிரயாணம் | பிரியம் |
| மடியில் | பலபேர் | செல்வர் | உலோகம் |
| சிலவேளை | பயணம் | வறியவர் | இலேசு |
| ஒதுக்கம் | பிரயாசை | உழைப்பு | |

**விளக்கம் :**

1. மடியில் வைத்திருக்கும் பொருள் எப்படிப் பட்டது?
2. அந்தப் பொருள் இல்லாவிடில் மக்கள் என்ன செய்யமாட்டார்கள்?
3. அந்தப் பொருள் எதனுல் செய்யப்பட்டது.
4. அப்பொருள் யாது?

**பேச்சு :**

**கோடிட்ட இடம் நிரப்பல் :**

1. நான்.........இருப்பேன்.
2. செல்வராயினும்........என்மேல்........இருப் பார்கள்.
3. .......ஒருவகையான.......செய்யப்பட்டேன்.
4. என்னை.........நிலத்தில் விழ.........
5. நான்.......மக்களிடம்......இருக்கமாட்டாது.

**சொற்களை முறைப்படுத்தி வாசித்தல் :**

1. நான் உலோகத்தினுல் ஒரு வகையான செய் யப்பட்டேன்.
2. நல்ல உள்ள பூட்டு நான் இருப்பேன் பெட்டி யில்.
3. என்னை மக்கள் பிரயாசைப்படுகிருர்கள், அடைவதற்கு.

ஒருமை ஆக்கல் :

| | |
|---|---|
| 1. நாங்கள் | 4. எங்கள் |
| 2. பலபேர் | 5. வைத்திருக்கிருர்கள் |
| 3. அவர்கள் | 6. சொல்லுங்கள் |

சொற்களைச் சேர்த்து வாசித்தல் :

1. வைத்து + இருப்பார்கள்
2. தூர + பயணம்
3. மயக்கம் + அடையாமல்
4. மனிதர் + இடத்தில்

எழுத்து :

1. உங்களிடத்தில் ஒரு ரூபா தந்தால் என்ன செய்வீர்கள் என எழுதுக.

2. இப்பாடத்தின் மூன்ரும் பந்தியை உறுப்பாய் எழுதுக.

# 5. பாப்பா அறிந்து கொள்

சாதிக் கொடுமைகள் வேண்டா—அன்பு
தன்னில் செழித்திடும் வையம்
ஆதர வுற்றிங்கு வாழ்வோம்—தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம். 1

யாரும் பணிந்திடும் தெய்வம்—பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று—இதில்
பற்பல சண்டைகள் வேண்டா. 2

அறிவை வளர்த்திட வேண்டும்—மக்கள்
அத்தனை பேருக்கும் ஒன்றாய்
சிறியரை மேம்படச் செய்தால்—பின்பு
தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும். 3

வயிற்றுக்குச் சோறிட வேண்டும்—இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும். 4

—மகா கவி பாரதியார்.

| | | | |
|---|---|---|---|
| கொடுமை | மாண்பு | மேம்பாடு | வாழ்த்து |
| செழிப்பு | பணிவு | ஆதரவு | பயிற்று |
| வையம் | பார் | அறிவு | வாழும் |

**விளக்கம் :**

1. எது கொடுமையானது ?
2. வையம் எதனில் செழித்திடும் ?
3. சமயச்சண்டை ஏன் தகாது ?
4. தெய்வம் எல்லோரையும் எப்பொழுது வாழ்த்தும்?
5. உலகத்தை உயர்த்த என்ன செய்ய வேண்டும் ?

**பேச்சு :**

**வசனம் ஆக்கல் :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அன்பு | 3. | ஆதரவு | 5. | அறிவு |
| 2. | வையம் | 4. | தெய்வம் | 6. | பயிற்றி |

**எதிர்ச்சொல் கூறல் :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கொடுமை | 3. | அன்பு | 5. | சிறியர் |
| 2. | வேண்டா | 4. | பணிவு | 6. | உயர்வு |

**ஒரே கருத்துள்ள வேறு பதங்கள் கூறல் :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கொடுமை | 3. | பணிவு | 5. | மேம்பாடு |
| 2. | வையம் | 4. | தெய்வம் | 6. | பார் |

**எழுத்து :**

நாம் பிறருக்குச் செய்யக் கூடிய நன்மைகளை எழுதுக.



## 6. நன்றி உள்ள நாய்

1. ஒரு ஊரில் ஒரு வேடன் இருந்தான். அவன் ஒரு நாயை வளர்த்து வந்தான். அவன் போகும் இடமெல்லாம் நாயும் போகும். ஒரு நாள் வேடன் பக்கத்தில் உள்ள ஆற்றுக்குக் குளிக்கப் போனுன். நாயும் அவனுடன் போனது.

2. நாய் தண்ணீரை எட்டிப் பார்த்தது. பின் தனது எஜமானனைச் சுற்றிச் சுற்றிக் குரைத்தது. வேடன் அதைக் கவனியாமல் ஆற்றுள் இறங்கப் போனுன். நாய் அவனுடைய காலைக் கவ்வி இழுத்தது. வேடன் நாயைத் துரத்திவிட்டு நீருள் இறங்கினுன்.

3. நாய் வேடனுக்கு முன்னர் ஆற்றில் குதித்தது. அப்பொழுது ஒரு பெரிய முதலை நாயை இழுத்துக்கொண்டு போனது.

4. வேடன் அதனைக் கண்டான். நாய் தன் காலைக் கவ்வி இழுத்த காரணத்தை உணர்ந்தான். அது தன்னில் வைத்திருந்த அன்பை அறிந்தான். தன்னை வளர்த்த நன்றிக்காக உயிரைக் கொடுத்த நாயை நினைந்து மனம் வருந்தினான்.

5. பிள்ளைகளே நாயின் நன்றி அறிதலைப் பார்த்தீர்களா? நாய் நன்றி உள்ள மிருகம். அது தன்னை வளர்ப்போர் இடம் மிகவும் அன்பாக இருக்கும்.

| | | | |
|---|---|---|---|
| நன்றி | வளர்த்து | கவனி | இழுத்தது |
| வேடன் | எட்டி | இறங்க | குதித்தது |
| எசமான் | குரைத்தது | கவ்வி | முதலை |
| காரணம் | உணர்தல் | அன்பு | |

**விளக்கம் :**

1. வேடன் ஆற்றுக்கு ஏன் போனான் ?
2. நாய் தண்ணீரைப் பார்த்தபின் என்ன செய்தது?
3. வேடன் நாயை என்ன செய்தான் ?
4. வேடன் தண்ணீரில் இறங்கு முன் நாய் என்ன செய்தது ?
5. ஆற்றில் குதித்த நாயின் முடிபு என்ன ?
6. வேடன் என்ன நினைத்து வருந்தினான் ?

**பேச்சு :**

**கோடிட்ட இடம் நிரப்பல் :**

1. ஒரு ஊரில்......... .........இருந்தான்.
2. நாய்.........எட்டிப்.........
3. நாய்.........காலைக்.........இழுத்தது.
4. அது.........வைத்திருந்த.........அறிந்தான்.
5. .........தன் உயிரைத்.........செய்தது.

**வசனம் ஆக்கல் :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | நன்றி | 3. | குதித்தது | 5. | தியாகம் |
| 2. | எசமான் | 4. | துரத்தி | 6. | கவ்வி |

**பின் வரும் சொற்களை முறைப்படுத்தி வசனமாக்கல் :**

1. ஒரு இருந்தான் வேடன்.
2. நாய் ஒரு அவன் வந்தான் வளர்த்து.
3. கவ்வி நாய் இழுத்தது காலை.

**பன்மை ஆக்கல் :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ஊர் | 3. | வேடன் | 5. | ஆறு |
| 2. | நாய் | 4. | இடம் | 6. | முதலை |

**சொற்கள் சேர்த்து வாசித்தல் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | வேடன் இருந்தான் | 4. | நாயை துரத்தி |
| 2. | இடம் எல்லாம் | 5. | உயிரை தியாகம் |
| 3. | எட்டி பார்த்தது | 6. | நன்றி உள்ள |

**எழுத்து :**

நாயைப் பற்றி பத்து வசனம் எழுதுக.

# 7. சுகவழி

1. நாம் சுகமாய் இருக்க விரும்பு-கிறோம். சுகம் நமக்கு மகிழ்ச்சியைத் தரும். சுகம் இல்லாதவர்கள் எப்பொழுதும் துக்க-மாக இருப்பார்கள்.

2. சுகமாய் இருக்க வேண்டுமானால் அதி காலையில் நித்திரைவிட்டு எழுதல் வேண்டும். நல்ல காற்றைச் சுவாசித்தல் வேண்டும். ஒவ்வொரு நாளும் வெளியான இடத்தில் விளையாட வேண்டும். தினமும் காலையில் குளித்தல் வேண்டும். சுத்தமான உடைகளை உடுத்தல் வேண்டும்.

3. காலையில் எழுந்தவுடன் தவறாமல் மலசலம் கழித்தல் வேண்டும். இருக்கும் பொழுதும் நடக்கும் பொழுதும் நிமிர்ந்து நடத்தல் வேண்டும்.

4. சுத்தமான காற்று வீசும் வெளியான இடத்தில் தினமும் உலாவ வேண்டும். படுக்கும் அறையில் உள்ள பலகணிகளைத் திறந்து வைத்து நித்திரை செய்தல் வேண்டும்.

5. சுகமே சிறந்த செல்வமாகும். சுகமாக இருப்பதற்கு உரிய வழிவகை களைச் சிறுவயதிலிருந்தே பழகிக்கொள்ள வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| விரும்பு | நித்திரை | மலசலம் | உலாவுதல் |
| துக்கம் | சுவாசித்தல் | கழித்தல் | பலகணி |
| அதிகாலை | உடை | நிமிர்ந்து | வழிவகை |
| செல்வம் | தவருமல் | பழகல் | |

**விளக்கம் :**

1. சுகம் இல்லாதவர்கள் ஏன் துக்கமாய் இருப்பார்கள் ?
2. சுகமாய் இருக்கவேண்டுமாஞல், யாது செய்ய வேண்டும் ?
3. எப்படியான இடத்தில் உலாவ வேண்டும் ?
4. படுக்கை அறை எப்படி இருக்க வேண்டும் ?
5. நற்பழக்கங்களை ஏன் சிறு வயதில் பழகிக் கொள்ள வேண்டும் ?

**பேச்சு :**

**வசனம் உண்டாக்கல் :**

1. சுகம்
2. மகிழ்ச்சி
3. சுவாசம்
4. உடை
5. அறை
6. வழிவகை

**எதிர்ச் சொல் கூறல் :**

1. சுகம்
2. நிமிர்ந்து
3. திறந்து
4. செல்வம்
5. இரு
6. நட

**பன்மை ஆக்கல் :**

1. விரும்புகிருர்
2. இல்லாதவர்
3. பலகணி
4. புத்தகம்
5. விளக்கு
6. நாற்காலி

**கோடிட்ட இடம் நிரப்பல் :**

1. நாம்.........இருக்க.........
2. நல்ல.........சுவாசிக்க வேண்டும்.
3. தவருமல்.........கழிக்க.........
4. ............திறந்து வைத்து............செய்தல் வேண்டும்.
5. சுகமே சிறந்த.........

**எழுத்து :**

1. சொல்வதெழுதல். இரண்டாம் பந்தி.
2. சுகமாக இருக்க யாது செய்ய வேண்டுமென எழுதுக.

## 8. கிழமை நாள்கள்

**மகன் :** அம்மா நாளைக்கு எனக்குப் பாட-சாலை இல்லை.

**அம்மா :** ஏன் மகனே பாடசாலை இல்லை?

**மகன் :** இது தெரியாதா அம்மா, நாளைக்-குச் சனிக்கிழமை.

**அம்மா :** அப்படியா? சரி; சரி. இன்றைக்கு என்ன கிழமை?

**மகன் :** வெள்ளிக்கிழமை.

**அம்மா :** மகனே, நீ நல்ல கெட்டிக்காரன். கிழமையில் எத்தனை நாள்கள் உண்டு?

**மகன் :** ஏழு நாள்கள் உண்டு.

**அம்மா :** வாரத்தின் முதல் நாளின் பெயர் என்ன?

**மகன் :** இதுதானா தெரியாது. ஞாயிற்றுக்-கிழமை.

**அம்மா :** அப்படியானால், ஏழு நாட்களின் பெயரையும் சொல் பார்க்கலாம்.

**மகன் :** ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியா-ழக்கிழமை, வெள்ளிக்கிழமை, சனிக்-கிழமை, என்பவைகளாகும்.

**அம்மா :** சந்தோஷம். இவைதான் ஒரு வாரத்தின் அல்லது கிழமையின் ஏழு நாட்களுமாகும். இவற்றைச் சுருக்கிச் சொல்ல உனக்குத் தெரியுமா ?

**மகன் :** இல்லை அம்மா. எப்படிச் சொல்கிறது ?

**அம்மா :** ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்று சொல்ல வேண்டும்.

| | | |
|---|---|---|
| நாளைக்கு | கிழமை | சுருக்கி |
| தெரியாது | பெயர் | என்பவை |
| இன்றைக்கு | வாரம் | இவற்றை |
| கெட்டிக்காரன் | சந்தோஷம் | சொல்வார்கள் |

**விளக்கம் :**

1. இன்றைக்கு என்ன கிழமை ?
2. நேற்று என்ன கிழமை ?
3. முந்த நாள் என்ன கிழமை ?
4. வாரத்தின் ஏழு நாட்களும் எவை ?
5. உங்கள் ஓய்வு நாள் எது ?
6. புதன் கிழமைக்கும் வெள்ளிக் கிழமைக்கும் இடையே என்ன நாள் ?

**பேச்சு :**

கோடிட்ட இடம் நிரப்பல் :

1. நாளைக்கு.........பாடசாலை.........
2. இன்றைக்கு என்ன.........
3. கிழமையில்.........நாட்கள்.........
4. வாரத்தின்.........நாள்.........

**வசனம் ஆக்கல் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | நாளைக்கு | 4. | சந்தோஷம் |
| 2. | வெள்ளிக்கிழமை | 5. | கெட்டிக்காரன் |
| 3. | சுருக்கி | 6. | வாரம் |

**பன்மை ஆக்கல் :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | நாள் | 3. | என்பது | 5. | கடை |
| 2. | பாடசாலை | 4. | உமக்கு | 6. | பாட்டு |

**எதிர்ச்சொல் கூறல் :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | நாளைக்கு | 3. | அம்மா | 5. | இல்லை |
| 2. | மகன் | 4. | முதல் | 6. | தெரியாது |

## எழுத்து :

1. வாரத்தின் ஏழு நாட்களின் பெயர் எழுதுக.
2. சனிக்கிழமை என்ன செய்தீரென ஐந்து வசனம் எழுதுக.



# 9. கோழி

1. கோழி வீட்டில் வளரும் பிராணி. அது பறவை இனத்தைச் சேர்ந்தது. பெட்டைக் கோழி முட்டையிடும். சேவல் காலையிலே கூவும். கோழி அதிக உயரத்திற்குப் பறக்க மாட்டாது.

2. சேவலின் தலையில் சிவந்த பூ உண்டு. நீண்ட அழகான வால் இருக்கிறது. சேவல் பார்வைக்கு அழகாய் இருக்கும்.

3. கோழி அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும். பெட்டைக் கோழி முட்டையின் மேல் இருந்து அடை காக்கும். அடை காத்த இருபத்தொரு நாளின் பின் முட்டையில் இருந்து குஞ்சு வெளியாகும்.

4. கோழி தன் குஞ்சுகளுக்குக் கால்களால் குப்பையைக் கிளறி இரையைக் காண்பிக்கும். பருந்து, வல்லூறு, கீரி முதலிய பிராணிகள் கோழிக் குஞ்சைக் கொன்று தின்னும். தாய்க்கோழி பகையான இந்தப் பிராணிகளைக் கண்டால் சத்தமிடும். அப்பொழுது குஞ்சுகள் ஓடி ஒளித்துக் கொள்ளும்.

5. நமது நாட்டில் பலர் கோழி வளர்க்கிறார்கள். அவர்களிடம் நூற்றுக்கணக்கான கோழிகள் உண்டு. கோழி வளர்ப்பவர்கள் கோழிகளுக்கு நோய் வராமல் மருந்து கொடுப்பார்கள். கோழி வளர்ப்பு மிகவும் இலாபத்தைக் கொடுக்கும். அதனை நாம் விருத்தி செய்ய வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| பிராணி | சிவப்பு | குஞ்சு | நோய் |
| இனம் | வால் | குப்பை | மருந்து |
| பறவை | கூவும் | கிளறி | இலாபம் |
| உயரம் | அடை | பகை | ஒளித்து |
| சேவல் | பொரிக்கும் | வளர்த்தல் | விருத்தி |

**விளக்கம் :**

1. கோழி எந்த இனத்தைச் சேர்ந்தது ?
2. சேவலைப் பற்றி யாது அறிவீர் ?
3. கோழி எவ்வாறு குஞ்சு பொரிக்கும் ?
4. கோழிக் குஞ்சுகளுக்குப் பகையான பிராணிகள் எவை ?
5. கோழி வளர்ப்பு எப்படியான தொழில் ?

**பேச்சு :**

ஏற்ற சொல் வைத்து நிரப்புக :

1. கோழி.........வளரும்.........
2. கோழி அதிக.........பறக்க மாட்டாது.
3. ......... .........முட்டை இடும்.
4. அடை காத்த...........நாளில் முட்டையில் இருந்து.........வரும்.
5. கால்களால்.........கிளறி........காண்பிக்கும்.

வசனம் ஆக்கல் :

1. பிராணி
2. பறவை
3. கூவும்
4. இரை
5. ஒளிந்து
6. இலாபம்

ஒருமை ஆக்கல் :

1. கோழிகள்
2. பிராணிகள்
3. சேவல்கள்
4. முட்டைகள்
5. குஞ்சுகள்
6. அவர்கள்

**எழுத்து :**

1. வீட்டில் வளரும் பிராணிகள் ஐந்தின் பெயர்கள் எழுதுக.

2. பெட்டைக் கோழியைப் பற்றி ஐந்து வசனம் எழுதுக.

146547



## 10. உலாவப் போவோம் (சம்பாஷணை)

**தந்தை :** மகனே உலாவப் போவோம் வருகிறாயா ?

**மகன் :** ஆம் அப்பா நானும் வருகிறேன்.

**தந்தை :** சரி, நாம் முற்ற வெளிக்குப் பக்கத்தில் இருக்கும் பூஞ்சோலைக்குப் போவோம்.

**மகன் :** எனக்குப் பூஞ்சோலையைப் பார்க்க வேண்டுமென்று அதிக நாளாக ஆசை அப்பா.

**தந்தை :** தம்பி இந்தப் பூஞ்சோலையைப் பார். இங்கு பல நிறமான பூக்கள் பூத்திருக்கின்றன அல்லவா ?

TB
O-,6(2)

**மகன்:** ஆம் அப்பா நல்ல வாசனை கூட வீசுகிறதே.

**தந்தை:** அது இங்குள்ள பூக்களில் இருந்துதான் வருகிறது.

**மகன்:** அப்பா இங்கே இவ்வளவு சனங்கள் கூட்டமாக ஏன் வந்திருக்கின்றார்கள்?

**தந்தை:** எல்லோரும் நம்மைப் போலவே உலாவுவதற்குத்தான் வந்திருக்கின்றார்கள்.

**மகன்:** ஏன் அப்பா உலாவ வேண்டும்?

**தந்தை:** தம்பி நாம் காலை நேரத்தில் அல்லது மாலை நேரத்தில் உலாவுவதனால், சோர்வு நீங்கும். சுறுசுறுப்பு உண்டாகும். நமது உடம்பு சுகமாக இருக்கும். மனத்திற்கும் உற்சாகம் ஏற்படும்.

**மகன்:** சரி, சரி. நாம் ஏன் எல்லா இடங்களிலும் உலாவக் கூடாது?

**தந்தை:** எப்பொழுதும் சுத்தமான காற்று வீசும் பரந்த வெளியிலும், கடற்கரையிலும், பூஞ்சோலையிலும் உலாவுவதுதான் நல்லது. இவ்விடங்கள்தான் சுகத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்கும். நெருக்கமாய் உள்ள இடங்களிலும் சுத்தமான காற்று வீசாத இடங்களிலும்

வாகனப் போக்குவரத்துள்ள வீதிகளிலும் உலாவுதல் கூடாது.

| | | |
|---|---|---|
| உலாவ | கூட்டம் | கடற்கரை |
| முற்றவெளி | சோர்வு | இன்பம் |
| பூஞ்சோலை | சுறுசுறுப்பு | மகிழ்ச்சி |
| வீசுகின்றது | பரந்தவெளி | போக்குவரத்து |

**விளக்கம் :**

1. தந்தையும் மகனும் எங்கே உலாவச் சென்றுர்கள்?
2. பூஞ்சோலையில் எதனைக் கண்டார்கள் ?
3. உலாவுவதனுல் என்ன நன்மைகள் உண்டு ?
4. எப்படியான இடங்களில் உலாவுதல் வேண்டும் ?

**பேச்சு :**

**கோடிட்ட இடம் நிரப்பல் :**

1. உலாவப்.........வருகிருயா ?
2. இந்தப்.........பார்.
3. மனதிற்கும்.........ஏற்படும்.
4. சுத்தமான.........வீசும் இடங்களில்......... வேண்டும்.

**பன்மை ஆக்கல் :**

| | | |
|---|---|---|
| 1. சோலை | 3. வீதி | 5. கண் |
| 2. பூ | 4. வண்டி | 6. மேசை |

**சேர்த்து வாசித்தல் :**

| | |
|---|---|
| 1. பூ சோலை | 3. கடல் கரை |
| 2. பூத்து இருக்கின்றன | 4. நம்மைப் போலவே |

**எழுத்து :**

1. உலாவுதலினுல் ஏற்படும் நன்மைகளை எழுதுக.
2. **பின் வரும் சொற்களை வைத்து வாக்கியம் எழுது :**

| | |
|---|---|
| 1. சுறுசுறுப்பு | 4. கடற்கரை |
| 2. போக்குவரத்து | 5. சோர்வு |
| 3. இன்பம் | 6. உற்சாகம் |

## 11. கிழக்கு வெளுத்தது (பாட்டு)

கிழக்கு வெளுத்தது
கிளிகள் அழைத்தன
மளக் கென்றெழுந்திரு—பாப்பா
மழலைகள் பேசடி பாப்பா. 1

காக்கையும் குருவியும்
கதை சொல்லுகின்றன
கேட்க நீ ஓடி வா—பாப்பா
கேட்டொரு கதை சொல்லு—
பாப்பா. 2

தோப்பு வனமெல்லாம்
சுகமான வாசனை
பூப் பறித் தாடுவோம்—பாப்பா
பொன் வண்டழைத்தது—பாப்பா. 3

—கவி யோகி சுத்தானந்தர்

| | | |
|---|---|---|
| கிழக்கு | மழலைகள் | ஆடுவோம் |
| வெளுத்தது | தோப்பு | பாப்பா |
| அழைத்தன | வனம் | வண்டு |
| மளக்கென்று | பறித்து | அழைத்தது |

**விளக்கம் :**

1. சூரியன் எத்திசையில் உதயமாகின்றது ?
2. காலையில் பறவைகள் என்ன செய்கின்றன ?
3. பாப்பாவை ஏன் ஓடி வரும்படி சொல்லுகிறாய் ?

4. தோப்புக்களிலும் வனங்களிலும் நல் மணம் எப்படி உண்டாகிறது?

**வசனம் உண்டாக்கல் :**

| | | |
|---|---|---|
| 1. கிழக்கு | 3. கதை | 5. வனம் |
| 2. மழலை | 4. ஓடி | 6. பறித்து |

**எதிர்ச் சொல் கூறல் :**

| | | |
|---|---|---|
| 1. கிழக்கு | 3. சொல் | 5. நீதி |
| 2. வெளுத்தது | 4. கேள் | 6. ஏழை |

**பன்மை ஆக்கல் :**

| | | |
|---|---|---|
| 1. கிளி | 3. குருவி | 5. பூ |
| 2. காக்கை | 4. வனம் | 6. வண்டு |

**எழுத்து :**

சூரியன் உதயமாகும் பொழுது என்ன நடைபெறுமென எழுதுக.



## 12. கமத்தொழில்

1. கணபதி ஒரு கமக்காரன். அவன் தன்னுடைய வயலை உழுது பண்படுத்தி நெல் விதைப்பான். நெல் முளைத்து வளரும். கணபதி தினமும் வயலுக்குப் போவான். வயலில் நெற்பயிருடன் முளைத்து வளரும் புற்களைப் பிடுங்குவான். அதற்குக் களை பிடுங்குதல் என்று பெயர்.

2. நெல் வளர்ந்து கதிர் ஈனும். கதிர் முற்றிய பின் அதனை அரிவாளால் வெட்டுவார்கள். அதற்கு அருவி வெட்டு என்று பெயர். வெட்டிய நெற் கதிர்களை நெற்போராக அடுக்கி வைப்பார்கள். பின்னர் நெற்போரை அடித்து நெல் வேறு பதர் வேருகப் பிரிப்பார்கள்.

3. நெல் நமக்குப் பிரதானமான உணவுப் பொருள். நெல்லைக் குற்றி அரிசி எடுக்கிறோம். அரிசியைச் சமைத்துச் சோறாகச் சாப்பிடுகிறோம். கமத்தொழில் செய்பவனே நமக்கு வேண்டிய உணவைத் தருகிறான்.

4. கமத்தொழில் மிகவும் மேன்மையான தொழில். அதனைச் செய்பவர்கள் பிற தொழில் செய்பவர்களுக்குப் பின் செல்ல வேண்டியதில்லை. அவர்கள் தங்களுக்கு நன்மையைத் தேடிக்கொள்வதோடு, பிறருக்கும் நன்மை செய்கிறார்கள்.

| | | |
|---|---|---|
| கிராமம் | முளைத்தல் | கதிர் |
| கமத்தொழில் | பயிர் | ஈனும் |
| வயல் | மேன்மை | அரிவாள் |
| உழுது | முளைத்து | அருவி வெட்டு |
| சமைத்து | புற்கள் | பிறர் |
| உணவு | பிடுங்குதல் | நெற்போர் |
| பண்படுத்தல் | களை | பதர் |
| விதைத்தல் | நன்மை | பிரித்தல் |
| பிரதானமான | | |

**விளக்கம் :**

1. கணபதி ஏன் தினமும் வயலுக்குப் போகிறான்?
2. களை பிடுங்குதல் என்றால் என்ன?
3. அருவி வெட்டு என்றால் என்ன?
4. எப்படி நெல் வேறு பதர் வேறாகப் பிரிப்பீர்கள்?
5. கமத்தொழில் எவ்வாறு சிறப்புடைய தொழிலாகும்?

**பேச்சு :**

**கோடிட்ட இடங்கள் நிரப்பல் :**

1. கணபதி ஒரு.........
2. வயலை உழுது.........நெல்.........
3. நெல்.........கதிர்.........
4. நெல்லைக்.........அரிசி.........
5. .........சிறந்த தொழில்.

**வசனம் ஆக்கல் :**

| | | |
|---|---|---|
| 1. வயல் | 3. அருவி வெட்டு | 5. அரிசி |
| 2. வளரும் | 4. பிரதானமான | 6. கமக்காரன் |

**எதிர்ச் சொல் கூறல் :**

| | | |
|---|---|---|
| 1. வளரும் | 3. நல்ல | 5. அழுதல் |
| 2. முற்றிய | 4. கறுப்பு | 6. ஒளி |

**எழுத்து :**

**பின்வரும் வசனங்களை முறைப்படி எழுதுக :**

1. கமம் செய்தல் தொழில் முக்கியமான.
2. கமக்காரன் ஒரு கணபதி.
3. கதிர் வளர்ந்து நெல் ஈனும்.
4. தொழில் சிறந்த கமத் தொழிலே.



# 13. காணமற் போன கடிதங்கள்

1. ஒரு காடு இருந்தது. அந்தக் காட்டின் நடுவில் ஒரு சிறு வீடு இருந்தது. அந்த வீட்டில் ஒரு நாயும் ஒரு பூனையும் வாழ்ந்து வந்தன. அங்கே ஒரு எலியும் இருந்தது. மூன்று பிராணிகளும் சிநேகிதமாய் இருந்தன.

2. ஒரு நாள் நாய்க்கு தீபாவளிக்கு வீட்டுக்கு வரும்படி ஒரு கடிதம் வந்தது. நாய் தன்னுடைய கடிதங்களைப் பூனை இடம் பத்திரமாய் வைத்து இருக்கும்படி கொடுத்துவிட்டுத் தன்னுடைய வீட்டுக்குப் போனது.

3. அன்று பின்னேரம் பூனைக்கும் அதன் மனைவி இடமிருந்து வீட்டுக்கு வரும்-

படி ஒரு கடிதம் வந்தது. பூனை நாய் கொடுத்த கடிதங்களை எலியிடம் கவனமாய் வைத்திருக்கும்படி கொடுத்து விட்டு அதுவும் வீட்டுக்குப் போய்விட்டது.

4. ஒரு நாள் மழை விடாமல் பெய்து கொண்டிருந்தது. எலிக்குத் தேனீர் வைத்துக் குடிக்க விறகு கிடைக்கவில்லை. எலி அந்தக் கடிதங்களை எல்லாம் எரித்துத் தேநீர் வைத்துக் குடித்தது.

5. மறுநாள் நாய் திரும்பி வந்து பூனையிடம் தான் கொடுத்த கடிதங்களைக் கேட்டது. பூனை எலியிடம் தான் கொடுத்த கடிதங்களைக் கேட்டது. எலியினால் ஒரு பதிலும் சொல்ல முடியவில்லை. உடனே அது கூரையினுள் ஓடி மறைந்து விட்டது.

6. நாய் இப்பொழுதும் பூனையைக் கண்டால் துரத்திச் சென்று தனது கடிதங்களைத் தரும்படி கேட்கிறது. பூனை எலியைக் கண்டால் துரத்திச் சென்று தனது கடிதங்களைத் தரும்படி கேட்கின்றது. எலி கூரையினுள் ஓடி மறைந்து கொள்கின்றது.

| | | |
|---|---|---|
| வாழ்ந்து | வைத்திருக்கும்படி | கடிதங்கள் |
| சிநேகிதம் | கூரையினுள் | துரத்தி |
| தீபாவளி | மறைந்து | தரும்படி |
| பத்திரமாய் | கிடைக்கவில்லை | மனைவி |

**விளக்கம் :**

1. சிநேகிதமாக இருந்த பிராணிகள் எவை ?
2. நாய் ஏன் கடிதங்களைப் பூனை இடம் கொடுத்தது?
3. எலி கடிதங்களை என்ன செய்தது ?
4. பூனை கடிதங்களைக் கேட்டபொழுது எலி என்ன செய்தது ?
5. நாய், பூனை, எலி ஒன்றை ஒன்று ஏன் துரத்துகின்றன ?

**பேச்சு :**

**கோடிட்ட இடம் நிரப்பல் :**

1. தீபாவளிக்கு.........வரும்படி.........வந்தது.
2. மழை.........பெய்தது.
3. நாய்......... .........கடிதங்களைக் கேட்டது.
4. எலி.........ஓடு.........கொள்கிறது.

**சொற்களை வசனம் ஆக்கல் :**

| | | |
|---|---|---|
| 1. தீபாவளி | 3. பத்திரம் | 5. மனைவி |
| 2. சிநேகம் | 4. கவனம் | 6. துரத்தி |

**ஒருமை ஆக்கல் :**

| | | |
|---|---|---|
| 1. நாய்கள் | 3. எலிகள் | 5. கூரைகள் |
| 2. பூனைகள் | 4. கடிதங்கள் | 6. பிராணிகள் |

**எதிர்ச்சொல் கூறல் :**

| | | |
|---|---|---|
| 1. சிநேகம் | 3. ஓடி | 5. கவனம் |
| 2. இல்லை | 4. மறைந்து | 6. பெய்தது |

**எழுத்து :**

இப்பாடத்தின் முதலாம் பந்தியை உறுப்பமைய எழுதுக.



## 14. மோட்டார் வண்டி

1. பிள்ளைகளே நீங்கள் மோட்டார் வண்டியைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? நிலத்தில் பலவகையான வண்டிகள் ஓடுகின்றன. அவற்றுள் மோட்டார் வண்டி மிக விரைவாய் ஓடும். இதன் உதவியால் தூரத்தில் உள்ள இடங்களுக்கு விரைவாகப் போய்ச்சேரலாம்.

2. மோட்டார் வண்டி இயந்திரத்தின் உதவியால் ஓடுகிறது. இயந்திரம் வண்டியின் முன் பக்கத்தில் இருக்கிறது. மோட்டார் வண்டியைச் செலுத்தும் சாரதி இயந்திரத்தை இயக்குவான். இது ஓடுவதற்குப் 'பெற்ரோல்' எனப்படும் நில எண்ணெயும் தண்ணீரும் வேண்டும். 'பெற்ரோல்' இல்லாவிட்டால் இது கொஞ்சத் தூரமும் ஓடமாட்டாது.

3. இதற்கு நான்கு சில்லுகள் இருக்கின்றன. இவற்றின் மேல் றப்பரினுல் ஆன வளையங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. அவை காற்றினுல் நிரப்பப்பெற்றிருக்கும். காற்று நிரம்பி இருப்பதினுல் சில்லுகள் மிக இலகுவாய் உருளும். மோட்டார் வண்டியின் கூடாரம் தகட்டினுல் செய்யப்பட்டது. உட்பாகத்தில் ஆட்கள் இருப்பதற்கு ஆசனங்கள் உண்டு.

4. மோட்டார் வண்டியில் பெரிய வண்டிகளும் உண்டு. அவற்றை 'பஸ்' வண்டியெனவும் 'லொறி' எனவும் அழைப்பார்கள். பஸ் வண்டிகளில் சனங்கள் ஏறிப் பிரயாணம் செய்வார்கள். 'லொறி'கள் பாரமான பொருள்களை ஏற்றிச் செல்ல உதவும்.

5. மோட்டார் வண்டி அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய வெளி நாடுகளில் செய்யப்படுகின்றது. அங்கிருந்து கப்பல்கள் மூலம் இலங்கைக்குக் கொண்டு வரப்படுகின்றது. அதற்கு அதிக விலை கொடுத்து வாங்க வேண்டும். அதனுல் செல்வர்களே வாங்குகிருர்கள்.

| | | | |
|---|---|---|---|
| தரை | விரைவு | கூடாரம் | வெளி நாடு |
| ஆட்கள் | செலுத்தும் | நில எண்ணெய் | இயந்திரம் |
| வேகம் | இயக்குதல் | பாரம் | இறப்பர் |
| நிரப்பி | இலகு | ஆசனம் | |

**விளக்கம் :**

1. மோட்டார் வண்டியை எங்கே பார்த்திருக்கிறீர்கள் ?

2. மோட்டார் வண்டியினால் என்ன பயன் உண்டு ?

3. மோட்டார் வண்டி ஓடுவதற்குத் தேவையான பொருள்கள் என்ன ?

4. மோட்டார் வண்டியின் சில்லுகள் எப்படிப் பட்டவைகள் ?

5. 'பஸ்' வண்டியின் உபயோகம் என்ன ?

6. மோட்டார் வண்டி எந்தத் தேசங்களில் இருந்து வருகின்றது ?

**பேச்சு :**

**சொற்களை முறைப்படுத்தி வசனம் ஆக்கல் :**

1. ஓடுகிறது உதவியால் இயந்திரத்தின்.
2. உண்டு சில்லுகள் நான்கு இதற்கு.
3. இது நில எண்ணெயும் வேண்டும் தண்ணீரும் ஓடுவதற்கு.
4. 'லொறிகள்' இழுத்துச் செல்ல பொருள்களை பாரமான உதவும்.

**ஒரே கருத்துள்ள வேறு சொற்கள் கூறல் :**

1. தரை 3. செலுத்தல் 5. இருப்பதற்கு
2. வேகம் 4. ஆசனம் 6. உட்காருவதற்கு

**சொற்கள் சேர்த்து வாசித்தல் :**

1. பார்த்து + இருக்கிறீர்கள்
2. அங்கு + இருந்து
3. நிரம்பி + இருப்பதினால்
4. கொஞ்ச + தூரம்

**கோடிட்ட இடம் நிரப்பல் :**

1. மோட்டார் வண்டி.........உதவியால்.........
2. .........இல்லாவிட்டால் ஓட.........
3. இதற்கு.........சில்லுகள்.........
4. .........இருப்பதற்கு.........உண்டு.
5. வெளி.........இருந்து.........இலங்கைக்கு.....

**எழுத்து :**

மோட்டார் வண்டியின் உபயோகத்தைப் பற்றி எழுதுக.

# 15. வீட்டு மிருகங்கள்

1. நான்கு கால்களை உடைய பிராணிகள் மிருகங்கள் என்று சொல்லப்படும். அவற்றுள் ஆடு, மாடு, குதிரை, நாய், பூனை என்பன வீடுகளில் வளர்க்கப்படுகின்றன. அவை வீட்டு மிருகங்கள் எனப்படும்.

2. நமது நாட்டில் இரண்டு வகையான ஆடுகள் உண்டு. அவை வெள்ளாடு, செம்மறி ஆடு என அழைக்கப்படும். வெள்ளாடு பால் தருகிறது. வெள்ளாட்டுப் பால் மிகவும் உருசியானது. அது



உடம்புக்குச் சுகத்தைக் கொடுக்கும். வெள்ளாடு புல் தழை முதலியவற்றைத் தின்கிறது.



3. செம்மறி ஆட்டின் உடம்பில் மயிர் அடர்த்தியாக இருக்கும். அது புல் மேயும். அதனைப் பால், இறைச்சி, தோல், உரோமம் என்பவற்றிற்காக மக்கள் வளர்க்கிருர்கள்.



மாடு மனிதருக்கு மிகவும் பிரயோசனமானது. பசுவில் இருந்து பால் எடுக்கிறோம்.

பாலில் இருந்து தயிர், மோர், வெண்ணெய் என்பவற்றைப் பெறுகிரேம்.

எருத்து மாடுகள் வயல் உழுவதற்கும், வண்டி இழுப்பதற்கும் உதவுகின்றன. கமக்காரன் அதிக மாடுகள் வைத்திருப்பான். மாடுகள் புல், வைக்கோல், தவிடு, பிண்ணுக்கு முதலியவற்றைத் தின்னும்.

4. குதிரை அழகான பிராணி. அதன் காற் குளம்புகள் ஆடு மாடுகளின் குளம்புகளைப் போலப் பிளவு பட்டிருப்பதில்லை. இதனுல் இது மணல் நிறைந்த இடங்களிலும் சுலபமாய் நடந்து செல்லும். குதிரை அதிக வேகமாய் ஓடும். அது வண்டி இழுக்கவும், சவாரி செய்யவும் உதவுகின்றது. கொள்ளு, கடலை, புல் என்பவை குதிரையின் தீனி ஆகும்.



5. நாய் நன்றி உள்ள மிருகம். அது வீட்டைக் காக்கும். அதற்கு மோப்பம் பிடிக்கும் சக்தி உண்டு. அதனுல் அது வேட்டை ஆடவும், கள்ளரைப் பிடிக்கவும் உபயோகப்-



படுகிறது. நாய் சோறு, மாமிசம் என்பவற்றைச் சாப்பிடுகிறது.

6. பூனை உருவத்தில் சிறிய பிராணி. இதற்கு மீசை மயிருண்டு. இதன் நாக்கு சொர சொரப்பானது. பூனையின் கண்கள் இரவில் மிகவும் கூர்மையாகத் தெரியும். எலி, கரப்பொத்தான், முதலிய பிராணிகளைப் பூனை பிடித்துக் கொல்லும். அதற்குப் பாலில் அதிக பிரியம் உண்டு.



7. வீட்டில் வளர்க்கும் இவற்றைவிடக் காட்டில் வாழும் மிருகங்களும் உண்டு. யானை, புலி, சிங்கம், கரடி என்பன காட்டில் வளர்கின்றன. அவை காட்டு மிருகங்கள் எனப்படும்.

| | | | |
|---|---|---|---|
| மிருகம் | உரோமம் | தனி | பிரயோசனம் |
| உருசி | வெண்ணெய் | மீசை | வைக்கோல் |
| தழை | சுலபம் | கள்ளர் | பிராணிகள் |
| சக்தி | பிண்ணுக்கு | வேட்டை | மோப்பம் |
| அடர்த்தி | குளம்புகள் | சொரசொரப்பு | சவாரி |

**விளக்கம் :**

1. வீட்டு மிருகங்கள் எவை ?
2. ஏன் அவற்றை வீட்டு மிருகம் என்கிறோம் ?
3. வெள்ளாட்டின் உபயோகம் என்ன ?
4. எருத்து மாடுகள் எப்படிப் பயன்படுகின்றன ?
5. குதிரையின் குளம்புகள் எப்படிப் பட்டவை ?

6. நாயை ஏன் வீட்டில் வளர்க்கிறுர்கள் ?
7. பாலில் இருந்து எப்பொருள்களைப் பெறுகிறேம் ?

**பேச்சு :**

**கோடிட்ட இடம் நிரப்பல் :**

1. ஆடு.........குதிரை.........பூனை என்பன.....
2. வெள்ளாட்டுப்.........மிகவும்.........
3. எருத்து மாடுகள்.........இழுக்கவும்......உழவும் உதவுகின்றன.
4. குதிரையின்.........பிளவு பட்டிருப்பதில்லை.
5. நாய்க்கு.........பிடிக்கும்.........உண்டு.

**வசனம் ஆக்கல் :**

1. மிருகம் 3. உடம்பு 5. கமக்காரன்
2. உருசி 4. அடர்த்தி 6. சவாரி

**பின் வருவனவற்றைப் பொருத்தமாகக் கூறுக :**

1. ஆடு..................கனைக்கும்.
2. பசு..................குரைக்கும்.
3. குதிரை..................உறுமும்
4. பூனை..................கத்தும்.
5. நாய்..................கதறும்

**பன்மை ஆக்கல் :**

1. ஆடு 3. குதிரை 5. பூனை 7. வண்டி
2. மாடு 4. நாய் 6. மிருகம் 8. மனிதன்

**சொற்கள் சேர்த்து வாசித்தல் :**

1. வெள்ளாடு + பால்
2. பிரயோசனம் + ஆனது
3. வைத்து + இருப்பின்
4. மயிர் + அடர்த்தி

**எழுத்து :**

1. வெள்ளாடு, பசு, குதிரை இவற்றைப் பற்றி ஐந்து ஐந்து வசனங்கள் எழுதுக.
2. காட்டு மிருகங்களின் பெயர்கள் ஐந்து எழுதுக.

# 16. என் கதை

1. நான் ஒரு பறவை. நான் முதலில் ஒரு முட்டையுள் இருந்தேன். அப்போது அது தான் உலகம் என்று நினைத்தேன். உலகம் நீல நிறம் உடையது. வட்டமான வடிவம் உடையது என்று எண்ணினேன்.





2. பின்னர் நான் முட்டையிலிருந்துவெளிப்பட்டுக் கூட்டில் இருந்தேன். அப்பொழுது அக்கூடே உலகம் என்று நினைத்தேன். உலகம் என்னைச் சுற்றி இருந்த சிறு குச்சிகளால் ஆனது என்று எண்ணினேன்.



3. சில நாட்கள் கழிந்தன. என் இறக்கையில் இறகுகள் முளைக்க ஆரம்பித்தன. அப்போது நான் கூட்டை விட்டு வெளியே வர ஆரம்பித்தேன். கூடு இருந்த மரத்தின் கிளைகளைக் கண்டேன். கிளைகளில் இலைகள் நிறைந்திருந்தன.

அவற்றைப் பார்த்து, உலகம் இலைகளால் ஆனது, பச்சை நிறம் உடையது என்று நினைத்தேன்.



4. பின்னும் சில நாட்கள் கழித்தன. என் இறகுகள் பலமடைந்தன. அப்போது நான் நன்ருகப் பறக்கத் தொடங்கினேன். ஆ! உலகம் எவ்வளவு பெரியது! நீல நிறமான ஆகாயம், எவ்வளவு விசாலமானது என்று அவற்றைக் கண்டு ஆச்சரியப்பட்டேன்.

5. நான் உருவத்தில் எவ்வளவு சிறியவன். நான் வசிக்கும் உலகமோ எவ்வளவு பெரியது. இந்த உண்மையை இப்பொழுது நான் நன்ருக அறிந்து கொண்டேன்.

**சின்னஞ் சிறு குருவி போலத்**
**திரிந்து பறந்து வா பாப்பா.**

| | | | |
|---|---|---|---|
| உலகம் | கூட்டில் | முளைக்க | பறக்க |
| நீலநிறம் | குச்சி | கிளைகள் | ஆகாயம் |
| வட்டமான | இறக்கை | பச்சை | விசாலம் |
| வடிவம் | இறகு | பலம் | உருவம் |

**விளக்கம் :**

1. முட்டையுள் இருந்த புறவை உலகம் எப்படிப் பட்டது என எண்ணியது?

2. கூட்டில் இருக்கும்போது உலகத்தைப் பற்றிப் பறவையின் எண்ணம் யாது?

3. பறவைகள் கூட்டை விட்டு வெளியே வர அவற்றிற்கு உதவியாயுள்ளன யாவை?

4. உலகம் பெரியதென எப்பொழுது பறவை தெரிந்து கொண்டது?

5. பறவை தெரிந்து கொண்ட உண்மை யாது?

**பேச்சு :**

**அடைப்புக் குறியினுள் உள்ள சொற்களில் பொருத்தமானவற்றை அமைத்து நிரப்புக :**

1. நான் முதலில்.........இருந்தேன்.
(பெட்டியுள், கூட்டினுள், முட்டையுள்)
2. நான் முட்டையிலிருந்து வெளிப்பட்டுக்...... இருந்தேன்.
(கூட்டினுள், மரத்தினுள், கிளைகளுள்)
3. என் இறக்கையில்.........முளைக்க ஆரம்பித்தன.
(முடிகள், சிறகுகள், இறகுகள்)
4. நீல நிறமான ஆகாயம் எவ்வளவு.........
(நீளமானது, உயரமானது, விசாலமானது)
5. நான் உருவத்தில் எவ்வளவு.........
(பெரியவன், நெட்டையன், சிறியவன்)

**பன்மை ஆக்கல் :**

| | | |
|---|---|---|
| 1. பறவை | 3. கூடு | 5. கிளை |
| 2. உலகம் | 4. இறகு | 6. இலை |

**பின் வரும் சொற்களின் பொருள் தரும் வேறு சொற்களை அமைத்து வாக்கியங்களாக்குக :**

| | | |
|---|---|---|
| 1. உலகம் | 3. பலம் | 5. வசிக்கும் |
| 2. வடிவம் | 4. ஆச்சரியம் | 6. அறிந்து |

**எழுத்து :**

1. கூட்டை விட்டு வெளியே வந்த பறவை உலகத்தைப் பற்றி என்ன நினைத்தது என எழுதுக.

2. பறவையின் பல பருவங்களையும் எழுதுக.



## 17. வாழை

1. வாழை மனிதருக்கு மிகவும் உபயோகமான மரம். பலர் தங்கள் வீடுகளில் வாழை மரங்களை வளர்க்கிறார்கள். வாழையில் கப்பல் வாழை, கதலி வாழை, மொந்தன் வாழை, யானை வாழை எனப் பல இனங்கள் உண்டு.

2. வாழை மரம் பருத்து வளர்ந்ததும் அதில் இருந்து பல கன்றுகள் தோன்றும். வாழையை நடுமுன் ஆழமான குழி தோண்டுவார்கள். அக்குழியில் பசளை இடுவார்கள். பின் குட்டி வாழையை நடுவார்கள். வாழை நட்ட பின்னர் முறையாக நீர்ப் பாய்ச்சுவார்கள்.

3. வாழை ஒரு முறைதான் குலை ஈனும். அக்குலையின் நுனியில் சிவந்த நிறத்துடன் இருப்பது வாழைப்பூ. பூவுக்கு மேலே சீப்புச் சீப்பாகப் பிஞ்சுகள் காணப்படும். அவை முற்றிக் காயாகும். காய் முற்றிப் பழமாகும். வாழைப் பழம் மிகச் சுவை உடையது.

4. மொந்தன் வாழைக்காய் பெரும்பாலும் கறி சமைக்க உதவும். வாழைப் பூ, வாழைத்தண்டு முதலியவற்றிலும் கறி சமைப்பார்கள். வாழை இலை உணவு உண்பதற்கு உபயோகப்படுகின்றது. இவ்வாறு வாழையின் ஒவ்வொரு பகுதியும் மனிதருக்குப் பயன்படுகின்றது.

5. விசேட தினங்களிலும், திருவிழாக் காலங்களிலும், வாசல்களில் குலைவாழைகளை அலங்காரத்துக்காகக் கட்டுவார்கள்.

6. நமது வீட்டுத் தோட்டங்களில் வாழை நட்டு அதன் பிரயோசனங்களைப் பெறுதல் வேண்டும்.

"வாழை நடுகில் ஆழ நடு"

| | | | |
|---|---|---|---|
| மனிதர் | குலை | சுவை | அலங்காரம் |
| உபயோகம் | ஈனும் | சமைக்க | நடுதல் |
| இனங்கள் | சீப்பு | உணவு | பெரும்பாலும் |
| கன்றுகள் | பிஞ்சு | உண்பதற்கு | தோட்டம் |
| நீர்ப்பாய்ச்சல் | முற்றி | விசேடதினம் | பிரயோசனம் |

**விளக்கம் :**

1. வாழையில் சில இனங்கள் கூறுக.
2. வாழை எவ்விதம் பயிர் செய்யப்படுகிறது ?
3. வாழை எவ்வாறு நமக்குப் பயன்படுகின்றது ?
4. வாழையை ஏன் வாசல்களில் கட்டுகிருர்கள் ?
5. இப்பாடத்தில் உள்ள பழமொழி என்ன ?

**பேச்சு :**

கோடிட்ட இடம் நிரப்பல் :

1. வாழையில் பல.........உண்டு.
2. பூவுக்கு மேலே.......பிஞ்சுகள் காணப்படும்.
3. வாழைப்பழம் மிகவும்.........உடையது.
4. மொந்தன் வாழைக்காய்.........உதவும்.

வசனம் ஆக்கல் :

1. வாழை மரம்
2. சீப்புச் சீப்பு
3. வாழைப்பழம்
4. தோட்டம்

**எழுத்து :**

வாழையினுல் நாம் அடையும் பயன்கள் எவை என எழுதுக.

# 18. படத்தின் பெயரைச் சேர்த்து வாசித்தல்

குறிப்பு :—படத்தின் பெயரைச் சேர்த்து வாசி.


பெண்
(1)


மரம்
(2)


குருவி
(3)


கை
(4)


பானை
(5)


நாற்காலி
(6)


சுவர்
(7)


குரங்கு
(8)

ஓர் ஊரில் ஒரு (1) இருந்தாள். அவள் தோட்டத்தில் உயர்ந்த (2) இருந்தது. அதன் உயர்ந்த கிளையில் ஒரு சிறிய (3) இருந்தது. அவள் அதைப் பிடிக்க எண்ணிக் (4) யை நீட்டினாள். அது எட்டவில்லை. அவள் அருகில் (5) இருந்தது. அதைக் கவிழ்த்து வைத்து அதன்மீது ஏறினாள். அப்போதும் பறவை எட்டவில்லை. பிறகு விட்டினுள் இருந்து ஒரு (6) யைக் கொண்டு வந்தாள். அதன்மீது ஏறி நின்றும் அப்பறவை எட்டவில்லை. உடனே அவள் மரத்தின் அருகில் இருந்த (7) மீது ஏறினாள். பறவை எட்டவில்லை. கடைசியாக அங்கு ஒரு (8) வந்தது. 'குரங்கண்ணே, குருவியைப் பிடித்துத் தாரும்,' என்று பெண் கேட்டாள். குரங்கு உடனே மரத்தின்மீது ஏறிற்று. அதைக் கண்ட பறவை பறந்து போய் விட்டது. பெண் ஏமாறிப் போனாள்.



## 19. குரங்கு

1. இது குரங்குகளின் படம். குரங்கின் முகம் மனிதன் முகம் போலவே இருக்கிறது. இதன் கை, கால்களும் மனிதனுடைய கை கால்களைப் போலவே உள்ளன. இதன் உடல் முழுவதும் மயிர் நிறைந்திருக்கிறது. மனிதனுக்கு இல்லாத உறுப்பாகிய வால், குரங்கிற்கு இருக்கிறது.

2. குரங்கு மிருக இனத்தைச் சார்ந்தது. அது குட்டி போட்டு, அதற்குப் பால் கொடுக்கும். குரங்கிற்கு மிருகத்தைப்போல நான்கு கால்களில்லை. அதற்கு மனிதரைப் போல இரண்டு கைகளும், இரண்டு கால்களும் உண்டு. கைகளிலும், கால்களிலும் தனித்தனி ஐந்து விரல்கள் இருக்கின்றன.

146547

3. குரங்கு மனிதனைப் போலவே நிற்கும், நடக்கும். ஆனால், சிறிது தூரந்தான் அதனால் நடக்க முடியும். குரங்கின் கால் விரல்களைவிடக் கை விரல்கள் நீளமானவை. அதனால் அது நன்றாக மரம் ஏறக்கூடியதாகவும், கிளைக்குக் கிளை தாவிப் பாயக் கூடியதாகவும் இருக்கின்றது.

4. குரங்கின் வாயில் இரண்டு பைகள் உண்டு. குரங்கு உணவுப் பொருளை இந்தப் பைகளில் நிரப்பிக் கொள்ளும். பின்னர் சிறிது சிறிதாகத் தின்னும். குரங்கு காய், கனி, கிழங்கு முதலிய பொருள்களைத் தின்னும். சிலர் வீடுகளில் சிலவகைக் குரங்குகளை வளர்க்கிறார்கள். அவை அரிசி, தேங்காய், வெல்லம், கடலை முதலிய பொருள்களை உண்ணுகின்றன.

5. குரங்குகளில் பலவகை உண்டு. அவற்றுள் வாலில்லாக் குரங்குமொன்று. அது 'கொரில்லா' என அழைக்கப்படும். குரங்கின் அருகில் போனால், அது கண்களை விழித்துப் பார்க்கும். பற்களைக் காட்டிக் கத்திப் பயப்படுத்தும்.

6. குரங்கு சிறிது நேரங்கூடச் சும்மா இருக்க மாட்டாது. ஏதாவது சேட்டை செய்து கொண்டே இருக்கும். அதனாலே

தான் சிறுவர் ஓய்வு ஒழிவு இன்றிக் கண்டபடி ஏதாவது செய்து கொண்டிருந்தால், குரங்குச் சேட்டை செய்யாதே என்று சொல்லுகிறார்கள்.

### குரங்குகளுள் நல்ல முகம் உடையது இல்லை

| | | | |
|---|---|---|---|
| உறுப்பு | கிளைக்குக்கிளை | வெல்லம் | விழித்து |
| இனம் | தாவிப்பாய | கடலை | பயப்படுத்தும் |
| சார்ந்தது | பைகள் | உண்ணும் | சேட்டை |
| விரல்கள் | நிரப்பி | கொரில்லா | ஓய்வு ஒழிவு |

1. குரங்கு எவ்வுறுப்புக்களில் மனிதனை ஒத்திருக்கின்றது?
2. குரங்கிற்கு இருக்கும் விசேடமான உறுப்பு யாது?
3. குரங்கு எந்த இனத்தைச் சார்ந்தது?
4. குரங்கின் கை விரல்கள் நீளமாக இருப்பதினால் உண்டாகும் பயன் என்ன?
5. குரங்குகள் எவ்வாறு உணவைச் சேமித்துச் சாப்பிடுகின்றன?
6. குரங்கின் உணவு யாது?
7. எதனைக் கொரில்லா என்று அழைக்கிறார்கள்?

பேச்சு :

அடைப்புக் குறியினுள் உள்ள சொற்களில் பொருத்தமானவற்றை அமைத்து நிரப்புக :

1. குரங்கின் உடம்பில் மயிர்.........இருக்கிறது.
(நிறைந்து, குறைந்து, அடர்ந்து.)
2. குரங்கு.........இனத்தைச் சார்ந்தது.
(மனிதன், பறவை, மிருகம்.)

3. குரங்கின் கால் விரல்களை விடக் கை விரல்கள்......... (மொத்தமானவை, குட்டையானவை, நீளமானவை.)
4. குரங்கின் வாயில் இரண்டு.........உண்டு. (பற்கள், அலகுகள், பைகள்.)

**பின்வரும் சொற்களின் பொருள் விளங்க வசனம் ஆக்குக:**

1. கிளைக்குக்கிளை
2. தாவிப்பாய
3. உறுப்பு
4. வெல்லம்
5. ஒய்வு ஒழிவு
6. கூடக்குறைய

**ஒருமை ஆக்கல் :**

1. விரல்கள்
2. கிளைகள்
3. பைகள்
4. குரங்குகள்
5. அவைகள்
6. மனிதர்

**எழுத்து :**

குரங்கிற்கும் நாய்க்கும் இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை எழுதுக.



## 20. எங்கள் பாட்டி (பாட்டு)

பாட்டி எங்கள் பாட்டி—எல்லாப்
பல்லும் போன பாட்டி.

கேட்கக் கேட்கக் கதைகள்—இன்னும்
கேட்கச் செய்யும் பாட்டி.

கடினமான பண்டம்—அதைக்
கடிக்கத் தெரியாப் பாட்டி.

படிப்பே யில்லாப் பாட்டி—ஆனல்
பலவும் தெரிந்த பாட்டி.

அப்பா அடித்துப் போட்டால்—என்னே
அணைத்துத் தேற்றும் பாட்டி.

தப்போ, தவருே செய்தால்—என்னைத்
தடுத்துத் திருத்தும் பாட்டி.

சாய்ந்து மடியில் படுத்தால்—என்னைத்
தட்டிக் கொடுக்கும் பாட்டி,

நோய்கள் ஏதும் வந்தால்—அதை
நொடியில் போக்கும் பாட்டி.

யாரும் காட்டா அன்பை—என்றும்
எனக்குக் காட்டும் பாட்டி.

நூறு நூறு ஆண்டு—இன்னும்
நூறு ஆண்டு வாழ்கவே!

—அழ. வள்ளியப்பா.

## 21. மூங்கில் இலை மேலே

1. வெகு காலத்துக்கு முன் நம் தமிழ் நாட்டில் **கம்பர்** என்று ஒரு புலவர் இருந்-தார். அவர் தமிழ் நன்ருய்க் கற்றவர். நினைத்த உடனே பாட்டுக்களைப் பாட அவரால் முடியும். அதனுல், 'கல்வியில் பெரியர் கம்பர்,' என்று அவரைப் புகழ்வது உண்டு.

2. ஒரு நாள் அவர் அயல் ஊருக்குப் போனுர். போகும் வழியில் ஒருவன் பாடிக்-கொண்டே ஏற்றம் இறைப்பதைக் கண்டார். அவன், "**முப்பதுடன் எட்டு, மூங்கில் இலை மேலே,**" என்று பாடி, இறைப்பதை நிறுத்திவிட்டுச் சாப்பிடப் போய்விட்டான்.

3. அது கேட்ட கம்பர், அந்தப் பாட்டை அவன் எப்படி முடிப்பான் எனச் சிந்தித்தார். அவருக்கு ஒன்றும் விளங்க-வில்லை. கம்பர் என்ன செய்வார்? ஏற்றக்-காரன் மறுபடியும் வந்து இறைக்கத் தொடங்கும் வரையில், அங்கேயே உட்-கார்ந்திருந்தார்.

4. ஏற்றக்காரன் சாப்பிட்டுவிட்டு வந்-தான். மறுபடியும் இறைக்கத் தொடங்கி-னுன். முன் விட்ட இடத்திலிருந்து பாட்டைப்

பாட ஆரம்பித்தான். "**மூங்கில் இலை மேலே, தூங்கும் பனி நீரே,**" என்று சொல்லிப் பாட்டை முடித்தான்.

5. அதனைக் கேட்ட கம்பருக்கு ஆனந்தம் பொங்கியது. "நாம் எல்லாம் கற்றுவிட்டோம் என்று கர்வம் கொள்ளக்கூடாது," என்பது அவர் நினைவுக்கு வந்தது. "**ஏற்றப் பாட்டுக்கு எதிர்ப் பாட்டு இல்லை,**" என்று சொல்லிக்கொண்டே அவர் போனார்.

**கற்றது கைம்மண்ணளவு**
**கல்லாதது உலக ளவு.**

| | | | |
|---|---|---|---|
| மூங்கில் | நினைத்த | சிந்தித்து | பொங்கியது |
| புலவர் | புகழ்வது | விளங்க | கர்வம் |
| வெகு | ஏற்றம் | தூங்கும் | ஏற்றப்பாட்டு |
| கற்றவர் | இறைப்பு | ஆனந்தம் | எதிர்ப்பாட்டு |

**விளக்கம் :**

1. கம்பர் எப்படிப்பட்டவர் ?
2. கம்பரைப் பற்றி வழங்கும் பழமொழி யாது ?
3. கம்பர் வழியில் கண்ட காட்சி என்ன ?
4. ஏற்றக்காரன் பாடிய பாட்டு யாது ?
5. ஏற்றக்காரன் எவ்வாறு பாட்டைப்பாடி முடித்தான் ?
6. கம்பர் இறுதியில் என்ன சொல்லிக் கொண்டு போனார் ?

**பேச்சு :**

அடைப்புக் குறியினுள் உள்ள சொற்களில் பொருத்தமானவற்றை அமைத்து நிரப்புக :

1. கம்பர் என்று ஒரு.........இருந்தார்.
(பெரியார், பண்டிதர், புலவர்.)
2. அவர் தமிழ் நன்ருய்க்.........
(படித்தவர், கண்டவர், கற்றவர்.)
3. அந்தப் பாட்டை எப்படி முடிப்பான் என.........
(எண்ணினுர், சொன்னுர், சிந்தித்தார்.)
4. ஏற்றப்பாட்டுக்கு எதிர்ப்பாட்டு.........
(உண்டு, இருக்கும், இல்லை.)
5. கம்பருக்கு ஆனந்தம்.........
(கண்டது, வழிந்தது, பொங்கியது.)

எதிர்ச்சொல் கூறல் :

| | | |
|---|---|---|
| 1. புலவர் | 3. விட்டான் | 5. தம்பி |
| 2. அவர் | 4. முடித்தான் | 6. தொடங்கு |

பின் வரும் சொற்களுக்குரிய பொருள் தரும் வேறு சொற்கள் அமைத்து வாக்கியங்களாக்குக :

| | | |
|---|---|---|
| 1. புலவர் | 3. ஊர் | 5. சிந்தித்தார் |
| 2. கற்றவர் | 4. ஏற்றம் | 6. கர்வம் |

**எழுத்து :**

இப்பாடத்திலுள்ள பழமொழிகளையும், பாட்டின் பகுதிகளையும் எழுதுக.



## 22. சிங்கம் பேசுகிறது

1. நான் யார் தெரியுமா? நான்தான் சிங்கம். காட்டுக்கு இராசா. பெரிய யானையைக் கூடக் கொன்று விடுவேன்! அவ்வளவு பலமுடையவன் நான்! தூக்கம் வந்தது. கண்ணை மூடினேன். யாரோ தொப் தொப் என்று என் மேலே குதித்ததை அறிந்தேன். கண்ணை விழித்துப் பார்த்தேன். ஒரு சுண்டெலி. அப்படியே அதைப் பிடித்தேன். "என் தூக்கத்தைக் கெடுத்த பயல் நீதானா?" என்று கேட்டேன்.

2. சுண்டெலி, "மகாராசா மன்னிக்கவேண்டும். தெரியாமல் செய்துவிட்டேன்; காப்பாற்றுங்கள்," என்றது. அவ்வளவு-

தான். "ஓடிப்போ பயலே," என்று அதை-விட்டு விட்டேன்.

3. சுண்டெலி, "மகாராசா வந்தனம்! உங்களுக்குப் பதில் உபகாரம் அவசியம் செய்வேன்," என்றது.

4. என் வால் பட்டாலே போதும்; சுண்-டெலி நசுங்கிச் செத்துப்போகும். அதுவா எனக்கு ஆபத்தில் உதவி செய்யப்போகிறது.

5. ஒரு நாள் நான் இரைதேடச் சென்-றேன். அப்பொழுது ஒரு வேடன் விரித்த வலையில் சிக்கிக்கொண்டேன். என்னல் அந்த வலையில் இருந்து தப்பிச் செல்ல முடிய-வில்லை. கோபத்துடனே சத்தம் இட்டேன். என்னுடைய சத்தம் வளையில் இருந்த அந்தச் சுண்டெலிக்குக் கேட்டது. அது ஓடிவந்து பார்த்தது. என்னைக் கண்டது.

6. நான் ஆபத்தில் இருக்கிறேன் என அறிந்தது. உடனே தன் கூரிய பற்களால் வலையை அறுத்தது. நான் தப்பிக் கொண்-டேன். அந்தச் சிறிய சுண்டெலி என்னு-டைய உயிரையே காப்பாற்றிவிட்டது. சிறியவர்கள் இடமும் பெரிய ஆற்றல் உண்டு. இப்பொழுது நான் சிறியவர்களை இகழ்வது இல்லை. நீங்களும் சிறியவர்களை ஒரு நாளும் இகழக்கூடாது.

| | | | |
|---|---|---|---|
| காடு | விழித்து | உபகாரம் | சிக்கி |
| இராசா | மன்னிக்க | நசுங்கி | கோபம் |
| பலம் | மகாராசா | ஆபத்து | வலை |
| தூக்கம் | வந்தனம் | இரை | ஆற்றல் |
| சுண்டெலி | காப்பாற்று | வலை | இகழ்வது |

**விளக்கம் :**

1. சிங்கம் எப்படிப்பட்டது ?
2. சுண்டெலி என்ன சொல்லித் தப்பியது ?
3. சிங்கத்திற்கு ஏற்பட்ட ஆபத்து என்ன ?
4. சுண்டெலி என்ன உபகாரம் செய்தது ?
5. சிங்கம் ஏன் சிறியவர்களை இகழ்வதில்லை ?

**பேச்சு :**

**கோடிட்ட இடம் நிரப்பல் :**

1. நான்தான்.........இராசா.
2. கண்ணை.........பார்த்தேன்.
3. ஒரு நாள் நான்.........தேடச் சென்றேன்.
4. சுண்டெலி தன்...........பற்களால்...........

அறுத்தது.

**வசனம் ஆக்கல் :**

1. இராசா 3. ஆபத்து 5. சிறியவர்
2. உபகாரம் 4. கோபம் 6. உடலை

**எழுத்து :**

இக்கதையைச் சுருக்கி எழுதுக.



## 23. நரியும் குகையும்

1. ஒரு காட்டில் ஒரு சிங்கம் வசித்து வந்தது. அதற்கு ஒரு நாள் முழுவதும் உணவு கிடைக்கவில்லை. அது மிகவும் துன்பத்துடன் தன் இருப்பிடத்திற்குத் திரும்பி வந்தது.

2. வரும் வழியில் அது ஒரு சிறு குகையைக் கண்டது. அந்தக் குகை ஏதா-வது ஒரு மிருகத்தின் குகையாக இருக்கும் என எண்ணியது. மாலைக் காலமாவதால் இன்னும் சிறிது நேரத்தில் இந்தக் குகையில் தங்கும் மிருகம் வரும். அதனைப் பிடித்துத் தின்னலாம் என்று நினைத்தது. உடனே அது அந்தக் குகையினுள் சென்று ஒளித்-திருந்தது.

3. பொழுது மறையும் நேரம் நரி தனது குகைக்கு வந்தது. வழியில் சிங்கத்தின் அடிச்சுவடுகளைக் கண்டது. குகைக்குள் சிங்கம் ஒளித்து இருக்கவேண்டும் என நினைத்தது. நரி வெளியே நின்று, "இதோ வந்து விட்டேன் ஓ! குகையே!!" என்று கூப்பிட்டது. ஒரு பதிலும் வரவில்லை. மீண்டும் நரி "ஓ குகையே! இன்று மாத்திரம் ஏன் பேசாமல் இருக்கிருய். ஒரு வார்த்தை யாகிலும் என்னுடன் பேசக்கூடாதா? நான் போய்விடவா?" என்று கேட்டது.

4. அதனைக் கேட்ட சிங்கம் தான் இருப்பதனுல் பயந்துதான், குகை நரிக்கு மறுமொழி சொல்லவில்லை என எண்ணியது. நரி வேறிடம் செல்லு முன்னர் தானே மறு-மொழி சொல்ல நினைத்து வாயைத் திறந்து கர்ச்சித்தது.

5. உடனே நரி தப்பினேன் பிழைத்-தேன் என ஓட்டம் பிடித்தது. எப்பொழுதும் தருணத்திற்கு ஏற்ற புத்தி ஆபத்தைத் தடுக்கும்.

**புத்திமான் பலவான்.**

| | | |
|---|---|---|
| துன்பம் | அடிச்சுவடு | பிழைத்தேன் |
| இருப்பிடம் | வார்த்தை | தருணம் |
| குகை | பயந்து | மறுமொழி |
| மாலை | எண்ணி | ஆபத்து |
| ஒளித்து | கர்ச்சித்து | பலம் |

**விளக்கம் :**

1. சிங்கத்திற்கு ஏன் துன்பம் ஏற்பட்டது ?
2. சிங்கம் குகையைக் கண்டதும் என்ன நினைத்தது ?
3. நரி வழியில் என்னத்தைக் கண்டது ?
4. நரி சிங்கம் உள்ளே இருப்பதை எப்படி அறிந்தது ?
5. சிங்கம் எப்படி ஏமாந்து போனது ?

**பேச்சு :**

கோடிட்ட இடம் நிரப்பல் :

1. ஒரு.........முழுவதும்........ கிடைக்கவில்லை.
2. சிங்கம் ஒரு சிறு.........கண்டது.
3. அது அந்தக்.........சென்று........இருந்தது.
4. வழியில் சிங்கத்தின்.........கண்டது.

வசனம் ஆக்கல் :

| | | |
|---|---|---|
| 1. காடு | 3. குகை | 5. வழி |
| 2. துன்பம் | 4. ஒளி | 6. புத்தி |

பின் வருவனவற்றைப் பொருத்தமாகக் கூறுக :

1. சிங்கம்............பிளிறும்.
2. புலி...........ஊளையிடும்.
3. நரி............கர்ச்சிக்கும்.
4. யானை...........உறுமும்.

பன்மை ஆக்கல் :

| | | |
|---|---|---|
| 1. சிங்கம் | 3. வந்தது | 5. கர்சித்தது |
| 2. நரி | 4. நினைத்தது | 6. பிடித்தது |

சொற்களைச் சேர்த்து வாசித்தல் :

1. மாலை + காலம்
2. ஒளித்து + இருந்தது
3. அடி + சுவடு
4. வார்த்தை + ஆகிலும்
5. வாயை + திறந்து
6. பேச + கூடாதா

எதிர்ச் சொல் கூறல் :

1. துன்பம் 2. மாலை 3. வெளி 4. பயம்

**எழுத்து :**

1. இக்கதையைச் சுருக்கி எழுதுக.
2. நரி சிங்கத்துக்கு அகப்படாமல் எப்படித் தப்பியது என எழுதுக.

# 24. பழமொழிகள்

1. அதிக ஆசை அதிக நட்டம்.
2. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு.
3. இல்லாதவன் பொல்லாதவன்.
4. ஈயாத உலோபி இருந்தென்ன இறந்தென்ன?
5. உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யலாமா?
6. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.
7. எறும்பு ஊரக் கல்லும் தேயும்.
8. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவுமா?
9. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
10. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
11. ஒட்டைச் சட்டியானாலும் கொழுக்கட்டை வேக வேண்டும்.
12. ஔவை வாக்கு அமுத வாக்கு.

# 25. கொன்றை வேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
3. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
4. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
5. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
6. கற்பெனப் படுவது சொல் திறம்பாமை.
7. கிட்டாதாயின் வெட்டென மற.
8. கீழோராயினும் தாழ வுரை.
9. கூரம்பாயினும் வீரியம் பேசேல்.
10. சான்றோரென்கை ஈன்றோர்க் கழகு.
11. சீரைத் தேடின் ஏரைத் தேடு.
12. சுற்றத்திற் கழகு சூழ இருத்தல்.
13. சூதும் வாதும் வேதனை செய்யும்.
14. தந்தை சொன் மிக்க மந்திரமில்லை.
15. தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை.
16. திரை கடலோடியும் திரவியம் தேடு.
17. நல் லிணக்கம் அல்லது அல்லற்படுத்தும்.
18. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
19. நோன்பென்பதுவே கொன்றுதின்னாமை.
20. புலையும் கொலையும் களவும் தவிர்.
21. பொல்லாங்கென்பவை எல்லாம் தவிர்.
22. மருந்தே யாயினும் விருந்தோ டுண்.
23. மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்.
24. மேழிச் செல்வம் கோழை படாது.
25. ஊக்கம் உடமை ஆக்கத்திற் கழகு.

# 26. வெற்றி வேற்கை

1. எழுத்தறிவித்தவன் இறைவனாகும்.

2. கல்விக் கழகு கசடற மொழிதல்.

3. கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.

4. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதராகும்மே.

5. எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும்
அக்குடியிற் கற்றோரை மேல் வருகென்பர்.

### செல்வ நிலையாமை

6. உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா.

7. குடை நிழலிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணு
[வர்.

8. குன்றத்தனை இரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர்.

### வறுமை நிலையாமை

9. அறத்திடு பிச்சை கூவி இரப்போர்
அரசோடிருந்து அரசாளினும் ஆளுவர்.

### இரப்போர்க்கு ஈதல்

10. இல்லோர் இரப்பதும் இயல்பே இயல்பே.

11. இரந்தோர்க்கு ஈவது உடையோர் கடனே.

### நட்பு

12. ஒரு நாட் பழகினும் பெரியோர் கேண்மை
இரு நிலம் பிளக்க வேர் வீழ்க்குமே.

13. நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை.
நீர்க்குட் பாசி போல் வேர்க் கொள்ளாதே.

ல் 23-7-55ல
2-ம் வகு பாடபுத்தகமாக
அங்கீகரிக்கப்பட்டது.]

## புதிய தமிழ்ப்பாட நூல்கள்

இவை யாவும் இனிய தமிழில் காலத்திற்கு ஏற்பப் புத்தம் புதிய பாடங்கள் சேர்த்துத் தயாரிக்கப்பட்டவை

| | | | |
|---|---|---|---|
| உமா வாசகம் (கீழ்ப் பிரிவு) வண்ணப் படங்களுடன் | | ... | 50 சதம் |
| உமா வாசகம் | I | ... | 50 ,, |
| ,, | II | ... | 60 ,, |
| ,, | III | ... | 70 ,, |
| ,, | IV | ... | 80 ,, |
| ,, | V | ... | 90 ,, |
| ,, | VI | ... | ரூ. 1-25 ,, |
| ,, | VII | ... | ரூ. 1-25 ,, |
| ,, | VIII | ... | ரூ. 1-50 ,, |

# UMA VACHAKAM

(TAMIL)

BOOK II—STANDARD II

KALAIVANI BOOK CENTRE
130, TRINCOMALI STREET, KANDY.

Copyright]

[*Price Cts. 6*